# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஆகஸ்ட் 11, 2018

Weekly E-paper • August 11, 2018





**அறிஞருக்குப் பின்னாலே**
**அழுதுவந்த கூட்டமெல்லாம்**
**கலைஞருக்குப் பின்னாலும்**
**கதறிவந்த காட்சிஇது!**

# அழைத்தீர்களா தளபதி?

● சுப.வீரபாண்டியன்






"பூவிதழின் மென்மையினும் மென்மையான புனித உள்ளம் அன்பு உள்ளம்" என்று தொடங்கும் அந்தக் கவிதையைத் தமிழ்நாட்டில் யார் மறப்பார்? 49 ஆண்டுகளுக்கு முன், பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது, வானொலியில் கலைஞர் பாடிய கவிதை அது! இன்றும் பலபேர் வரி மாறாமல் அந்தக் கவிதை முழுவதையும் மனப்பாடமாகச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அண்ணா மறைந்தாலும், அந்தக் கவிதை வாழ்ந்து கொண்டிருக்கிறது!

இனி ஒரு எழுத்து அப்படித் தமிழ்நாட்டிற்குக் கிடைக்குமா என்றுதான் கருதியிருந்தோம். கிடைத்துவிட்டது! அண்ணாவின் மரணத்தில் அனைவரையும் உலுக்கிய அந்தக் கவிதை போல, கலைஞரின் மரணத்தில் காவியமாய் ஒரு கடிதம் வந்திருக்கிறது. "ஒரே ஒரு முறை இப்போதாவது அப்பா என அழைத்துக் கொள்ளட்டுமா?" என்ற கேள்வியோடு தொடங்கும் அந்த மடலை, நம் அன்புத் தளபதி, கலைஞர் இறந்த நாளில் வெளியிட்டுள்ளார்.

இரண்டு எழுத்துகளுக்கும் இடையில், ஒற்றுமையும், முரணும் ஊடாடிச் செல்கின்றன. இருவர் எழுத்திலும் காணப்படும் பாச உணர்ச்சி ஓர் அரிய ஒற்றுமை எனில், உறவு சொல்லி அழைப்பதில், இரண்டுக்கும் இடையே எத்தனை முரண்!

"எல்லோரும் ஒரே வயிற்றில் பிறந்தால் தாய் வயிறு தாங்காது என்பதால்தான், தனித்தனியாய்ப் பிறந்து வந்துள்ளோம்" என்பார் அண்ணா. ஆம், திமு கழகத்தினர் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் இல்லை. ஆனால் அனைவரையும் தம்பி என்று அன்பொழுக அழைத்தார் அண்ணா. கட்சியின் தொண்டர்களும் அவரைத் தலைவரே என்று அழைக்காமல், "அண்ணா, அண்ணா" என்றே அழைத்தனர்.

இந்த உறவைத் தன் கவிதையில் கலைஞர் குறிப்பிட்டிருப்பார்.

**"தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்**
**நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்**
**மனிதரென்பார், மாணிக்கமென்பார்**
**மாநிலத்து அமைச்சரென்பார்"**

அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர், நெஞ்சத்து அன்பாலே "அண்ணா" என்பார் என்று கலைஞர் குறிப்பிடுவார். உடன்பிறக்கவில்லை என்றாலும், உடன்பிறந்த பாசத்துடன் அண்ணா என்று அழைத்த காலம் அன்று!

இப்போது உண்மையான உறவிருந்தும், பெற்ற மகன் தன் தந்தையை அப்பா என்று அழைக்காமல், "தலைவர்" என்று அழைத்து வந்தது ஏன்?

நம் தளபதி, தலைவர் கலைஞர் அவர்களைப் பொது இடங்களிலும், கட்சிக் கூட்டங்களிலும் அப்பா என்றே அழைத்திருந்தால், அது வெறும் குடும்ப உறவாக மட்டுமே இருந்திருக்கும், கொள்கை உறவாக மலர்ந்திருக்காது! தொண்டர்களுக்கும் அது ஊக்கம் தந்திருக்காது. அதனால்தான் அவர் 'தலைவர்' என்றே தலைவரை அழைத்ததை நாம் பார்த்தோம்.

ஆனாலும் அவர் உள்மனத்தில் இப்படி ஓர் ஏக்கம் இருந்திருக்கிறது என்பதைக் கழக உடன்பிறப்புகளே இப்போதுதான் அறிந்திருப்பர்.

**"நான் உங்களைத் தலைவரே தலைவரே**
**என உச்சரித்ததுதான் என் வாழ்நாளில் அதிகம்.**
**அதனால்**
**இப்போது ஒரே ஒரு முறை**
**"அப்பா" என்று**
**அழைத்துக் கொள்ளட்டுமா**
**தலைவரே"**

என்னும் தளபதியின் வரிகளைப் படித்தபோது, கண் கலங்காத கட்சித் தொண்டரே இல்லை எனலாம்.

தலைவர் கலைஞர் அண்ணாவிடம் கேட்ட இரவல் இதயமும், தளபதி நம் தலைவரிடம் கேட்ட உறவின் உருக்கமும் காலத்தை வென்று நிற்கும்!

இப்போது ஒன்றை என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. இறுதி நாளில், ஒருமுறையாவது அப்பா என்று அழைத்தீர்களா, தளபதி?

●

# கலைஞர்...













தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கலைஞருக்கு வீரவணக்கம்

புதிதாகச் சொல்வதற்கு ஏதுமில்லை. எல்லோரும் சொல்லிவிட்டார்கள், இவரைப் பற்றி.

பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவைப் போல, பன்முக ஆற்றலைக் கொண்டவர் இவர்.

எழுத்தாளர், கதையாசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், இதழாளர், பேச்சாளர், திரைப்பட வசனகர்த்தா, எதிர்க்கட்சித் தலைவர், முதல்வர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.

***"என் உயிரினும் மேலான***
***அன்பு***
***உடன்பிறப்பே!"***

என்ற சொல்லினால் தமிழர்களைக் கட்டிப்போட்டவர்.

தொன்மை மிக்க தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தை கூடப் புரிந்துகொள்ளலாம். ஆனால் எழுத்து - சொல் அதிகாரங்களைப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதன்று.

அத்தகைய எழுத்து சொல் அதிகாரங்களைப் பாமரனும் புரிந்து கொள்ளும் அளவிற்கு எளிமைப் படுத்திக் கொடுத்த இவர், புலவரோ, வித்துவானோ, தமிழை முதன்மைப் பாடமாகக் கல்லூரியில் படித்தவரோ இல்லை.

வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்தார். பார்க்கிறோம், அதை நாம். அதுமட்டும் போதாது என்று வள்ளுவத்திற்கு உரை எழுதி நம்மைப் படிக்கவும் வைத்திருக்கிறார்.

***"தமிழ் மீதுள்ள அன்பால்***
***பற்றால் பாசத்தால்***
***தமிழ் காத்து***
***தமிழரின் நலம் காக்கும்***
***தொண்டர்க்குத் தொண்டராகிய நான்***
***மணம் கமழும் தமிழே***
***மனம் கவரும் தாயே***
***இன்ப மொழியே அன்பு விழியே!***
***உயிரான தமிழே***
***உலகில் உயர்வான மொழியே***
***உனைப் போற்றிப் புகழ்வதன்றி***
***வேறு பணி எனக்கிலையே!"***

என உற்சாகமாகத் தமிழைப் பாடியவர்.

அவர்தான் தலைவர் கலைஞர்.

தமிழக மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில், இந்தியத் தலைவர்கள் ஓடோடி வந்து கலைஞர் மறைவின் துயரத்தில் பங்குகொண்டிருந்த அந்த நேரத்தில் கடற்கரையில் அவரைத் 'துயிலச்' செய்ய விடாமல் தடுக்க முயன்றது தமிழக அரசு.

வழக்குகளைக் காரணம் காட்டிக் கடற்கரையில் இடம் கொடுக்க முடியாது என்றார் எடப்பாடி.

ஆனால் நீதிமன்றக் கதவுகளை நீதிக்காகத் திறந்துவிட்டது நீதிமன்றம்.

தமிழக அரசின் இந்த நாகரிகமற்ற செயலைக் கண்டிப்பதோடு, தலைவர் கலைஞரின் மறைவுக்காகக் 'கருஞ்சட்டைத் தமிழர்' சார்பாக வேதனையையும், வீரவணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## தமிழ்நாட்டில்
# தகவல் தொழில்நுட்பப் புரட்சி!

● மா.உதயகுமார்



டைடல் பார்க், சென்னை



கலைஞருடன் பில் கேட்ஸ், தயாநிதி மாறன்...

இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டில் 1997 இல் விரிவான தகவல் தொழில்நுட்பக் கொள்கையைக் கலைஞர் உருவாக்கினார். 1998இல் தேசிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.

“மத்திய நிதியமைச்சர் சின்ஹா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டார். இருந்தபோதிலும் தமிழ்நாட்டின் முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறிநின்று சென்னையில் நிகழ்ந்து வரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லை. ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னை தான்.” என்று மும்பையிலிருந்து வெளிவரும் இணைய இதழான தி.டி.க்யூ வீக் (The DQ Week, 06.03.2000) புகழாரம் சூட்டியது.

கலைஞரின் பெரு முயற்சியால் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்திலும் முன்னோடியாகத் தனி முத்திரை பதித்தது. தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடும், தமிழ்நாட்டு இளைஞர்களும் இன்றடைந்திருக்கும் உச்சத்தை உலகறியும்.

மொழிநுட்பம் அறிந்த கலைஞர் தொலைநோக்குப் பார்வையுடன் தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தமிழகத்தில் நடத்தினார். இன்றைக்கு முகநூல், ட்விட்டர், வாட்ஸ்அப் என்று சமூக ஊடகங்களில் இயங்கும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத செய்தியாகும் இது.

# இருட்காட்டை
## அழித்த நிலா!

வெற்றிச்செல்வன்

நாட்டிலே நல்ல தெல்லாம்
    நாட்டினாய்! அநீதியைத் தான்
ஓட்டினாய் அறத்தி னாலே!
    தமிழர்க்குத் தமிழு ணர்ச்சி
ஊட்டினாய் உள்ள மெல்லாம்!
    சமநிலை யின்மை போக்க
மூட்டினாய் சமத்து வத்தீ
    முகிழ்த்தது சமூக நீதி!

அடிமையாய் வாழ்ந்த மக்கள்
    அனைவரும் உரிமை பெற்றார்
கொடியதோர் வறுமை நீங்கிக்
    குறைவிலா வாழ்வு பெற்றார்
விடியலே! வீழ்ந்தி டாத
    வீரமே! நந்த மிழ்த்தாய்
மடியிலா உறங்கப் போனாய்?
    மக்களை விட்டு விட்டு!

செந்தமிழ் நாட்டி லுள்ளோர்
    சிறப்புற வாழ்ந்தி டத்தான்
விந்தையாய் வந்து (உ)தித்த
    வீரனே! தமிழர் வாழ்வை
சிந்தையால் சீர்ப டுத்தி
    செழுமையாய் வாழச் செய்தாய்
எந்தையே எங்கு போனாய்
    எமையெலாந் தவிக்க விட்டு!



ஆதிதிராவிட மக்களுக்குச் சலவைத் தொழிலைச் செய்து, அவர்களுடைய பிறப்பு இறப்புச் சடங்குகளிலே பங்காற்றி, இன்னும் படிப்பறிவிலும், வேலை வாய்ப்பிலும் மிகவும் பின்தங்கியிருக்கின்ற மக்கள், புதிரை வண்ணார்கள் என்று அழைக்கப்படுகின்ற மக்களாவார்கள். அவர்களின் மேம்பாட்டிற்கான நல வாரியம் கலைஞர் ஆட்சியில் அமைக்கப்பட்டது. (அரசாணை G.O.Ms.No.1 14, AD & TW(ADW_6) Department, dated 15.10.2009). எந்த அரசும் ஏறெடுத்துப் பார்க்காத புதிரை வண்ணார் மக்களுக்காக நல வாரியம் உருவாக்கித் தந்த தலைவர் கலைஞர்.





Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.